சார்பு நீதிமன்றம், பொள்ளாச்சி

வழக்கு எண். எம்.சி.ஓ.பி. 17/2020

**PW 1- உதயகுமார்** **04.10.2024**

<u>சாட்சி சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு 3ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை</u>

மண்ணூர் ரோட்டில் விபத்து நடந்தது. விபத்து சமயத்தில் இறந்து போனவர் கூலி வேலை செய்து வந்தார். நிரந்தர வருமானமோ, நிரந்தர வேலையோ இல்லை என்றால சரியல்ல. சாலையை கடந்தபோது விபத்து நடைபெற்றது என்றால் சரியல்ல, சாலையை கடந்தபிறகு தான் விபத்து நடைபெற்றது. சாலையை கடக்கும்போது விபத்து நடந்தது என்றாலும் சாலையை கடந்த பிறகு விபத்து நடந்ததாக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. சாலை விதிகளை பின்பற்றி சாலையை கடந்ததிருநதால் விபத்தை தவிர்த்திருக்கலாம் என்றால சரியல்ல. இறந்தவரின் அஜாக்ரதையால் தான் விபத்து நடைபெற்றது என்றால் சரியல்ல. விபத்திற்கு இறந்து போனவர்தான் காரணம் என்றால் சரியல்ல. 1ம் எதிர்மனுதாரரின் அஜாக்ரதையால் விபத்து நடைபெறவில்லை என்றாலும், அவர் சரியாக தான் வாகனத்தை ஓட்டினார் என்றாலும் சரியல்ல. இறந்து போனவரின் வயது 70 என்றால் சரிதான். அதற்கு இறப்பு சான்றிதழ் உள்ளது. இறந்துபோனவர் வயது முதிர்ப்பு காரணமாக எந்த வேலைக்கு செல்லவில்லை என்றால் சரியல்ல. பல்வேறு தலைப்புகளின் கீழ் கேட்டுள்ள தொகை அதிகம் என்றால் சரியல்ல. இறந்துபோனவரின் வருமானத்தை நம்பி யாரும் இல்லை என்றால சரியல்ல. விபத்து இறந்துபோனவரின் அஜாக்ரதையால்

நடைபெற்றதாலும், 1ம் எதிர்மனுதாரரின் கவனக்குறைவால் ஏற்படவில்லை என்பதால் 3ம் எதிர்மனுதாரர் நஷ்ட ஈடு கொடுக்கவேண்டிய அவசியம் இல்லை என்றால் சரியல்ல.

இச்சாட்சியம் என் முன்பு நீதிமன்றத்தில் பதிவு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு அது சரி என்று அவரால் ஏற்றுக் கொள்ளப்பட்டது.

சார்பு நீதிபதி
பொள்ளாச்சி